## E.A. No.2/2026 in E.P. No.8/2025

**06.04.2026**

**ம.சா.1**

**திருமதி ஜானகி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மனு சொத்தை எனது பொது அதிகார முகவர் எதிர்மனுதாரருக்கு கிரயம் செய்தது தொடர்பாக பொது அதிகார முகவரிடம் கணக்கு எதுவும் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். மனு சொத்தில் எனக்கோ எனது பொது அதிகார முகவருக்கோ தற்சமயம் எந்த உரிமையும் இல்லையென்றால் தவறு, எனக்குதான் உரிமையுள்ளது. எனக்குதான் உரிமையுள்ளது என பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. மனு சொத்து எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்து எனவும் அவருக்குதான் உரிமையுள்ளது எனவும் சொன்னால் தவறு. மனு சொத்தில் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. என்னுடைய பொது அதிகார முகவருக்கு எதிராக வரவு-

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:36:26 +0530

செலவு கணக்கு கேட்டு ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நேரடியாக கேட்டதுதான்.

**மறு விசாரணை**

சேகர் என்பவருக்கு என்னுடைய பொது அதிகார முகவராக பவர் கொடுத்திருந்தேன். அதனை பினாமியாக அவரது மனைவிக்கு சொத்தை விற்றுள்ளார்.

**மறு குறுக்கு விசாரணை**

என்னுடைய பொது அதிகார முகவர் கோவிந்தராஜ் மகன் சேகரிடம் எதிர்மனுதாரர் 2 தவணையாக ரூ.22,00,000/- தொகை கொடுத்துதான் சொத்தை கிரயத்திற்கு வாங்கியுள்ளார் என்றால் இல்லை. பினாமியாக எழுதி கொடுத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:36:31 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

## E.A. No.2/2026 in E.P. No.8/2025

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கள்கிழமை

1969 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**நீ.ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதிமோகன் | தந்தையார் பெயர் | சந்திரமோகன் |
| கிராமம் | திருவாரூர் | வட்டம் | திருவாரூர் |
| தொழில் | | வயது | 42 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வரப்பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் விசாரணைக்கான ஆவணங்கள்தொடர்பான கோப்புகளை எடுத்து வந்துள்ளேன். எங்கள் அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழில் ஆவணங்கள் தொடர்பான விபரங்களை பதிவேற்றம் செய்து விடுவோம். ஆவண எண் 461/2003 தமிழ்நாடு அரசு சார்பாக அதன் கவர்னருக்கு ஜானகியால் எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான கடன் பத்திரமாகும். பதிவு செய்யப்பட்ட ஆவணம் முறையாக ரத்து செய்யப்படும் வரை ஏற்கனவே பதிவு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:36:38 +0530

செய்யப்பட்ட ஆவணம் நிலுவையில்தான் இருக்கும். ஒரே சொத்து சம்மந்தமாக 2 வது பதிவிற்கு வரும்போது முந்தைய பதிவினை பரிசீலனை செய்துதான் உத்தரவு பிறப்பிப்போம் என்றால் சரி. ஆவண எண்கள் 4867/2012 மற்றும் 2408/2012 ஆகியன ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 461/2003 க்கு பின்னிட்டவையாகும். 24.10.2025 அன்று நான் திருவாரூர் சார் பதிவாளராக பதவியேற்றேன். ஆவணங்கள் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். அன்றைய தேதியில் மேற்படி ஆவணங்கள் பிந்தைய தேதியில் பதியப்பட்டவையாக இருக்கும்பட்சத்தில் அப்போதைய சார் பதிவாளர்தான் பதிலளிக்க இயலும். ஆவண எண்கள் 4867/2012 மற்றும் 2408/2012 ஆகியவை இரண்டும் ஒரே தினத்தில் பதிவானவையல்ல. பத்திர பதிவுகள் எங்களது அலுவலகத்தில் முன்னுக்கு பின் முரணாக சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தை ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் நான் தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

ஆவண எண் 461/2003 ல் ஜானகி என்பவர் தமிழக அரசிற்காக அடமான கடன் பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரி. அடமான கடன் ரத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:36:43 +0530

செய்யப்பட்டு அது பதிவு செய்யப்படும் என்றால் சரி. ஆவண எண் 461/2003 ஆவணத்திற்கு பின்னிட்ட தேதிக்காக வில்லங்க சான்றினை எடுத்து வந்துள்ளேனா என்றால் அதுபோன்ற ஆவணத்தை எடுத்துவருமாறு அழைப்பாணையில் குறிப்பிடாததால் எடுத்து வரவில்லை. வில்லங்க சான்றினை பார்த்தால்தான் அடமான கடன் பத்திரம் ரத்து செய்த விபரம், ஒப்பந்தம் செய்து கொண்ட விபரம், கிரயம் செய்த விபரம் போன்றவை தெரியுமென்றால் சரி. ஒவ்வொரு பத்திர பதிவும் வில்லங்க சான்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரி. நான் நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு சொத்து தொடர்பான வில்லங்க சான்றினை பரிசீலனை செய்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு முன்னுக்கு பின் முரணாக பதிவுகள் உள்ளதாக சொன்னவை மனுதாரர் கேட்டுக் கொண்டதன் பெயரில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. ஆவண எண் 4867/2012 என்பது கடன் வாங்கப்பட்டதற்கான ஆவணமாகும். அதற்கான T.S. No.275 ஆகும். ஆவண எண் 4867/2012 யை எழுதியவர் மகேஷ் ஆவார். கரூர் வைஸ்யா வங்கிக்கு மேற்படி ஆவணமானது எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்து ஜானகி என்பவரின் சொத்தல்ல என்றால் சரி. ஆவண எண்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:36:48 +0530

2408/2012 என்பது ஒப்பந்த ஆவணமாகும். மேற்படி ஆவணம் ஜேம்ஸ் பாரிமன்னனுக்கு ஜானகியின் பொது அதிகார முகவரான சேகர் என்பவர் எழுதி கொடுத்த ஆவணமாகும். இதற்கான சர்வே எண் 177/1A1 அதன் புதிய எண் 177/14 ஆகும். 4867/2012 க்குரிய சொத்தும் 2408/2012 க்குரிய சொத்தும் வெவ்வேறானவை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.04.06 15:36:54 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.